பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper




# உதயன்

விலை ரூ2/50




சுடர்: 4 சுக்கில ஞூ ஆனி மீ 31 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1409 துல்ஹஜ் பிறை 11 (15 - 07 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:- 188

# அமிர், யோகேஸின் இறுதிக்கிரியைகள் நாளை யாழ்நகரில்

## மத்திய கல்லூரி மைதானத்தில் தகனம்

யாழ்ப்பாணம், ஜூலை 15

நேற்று முன்தினம் இரவு கொழும்பில் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் திரு. அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம், திரு. வெற்றிவேலு யோகேஸ்வரன் ஆகியோரின் இறுதிக் கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ்நகரில் நடைபெறும்.

தலைவர்களின் மறைவையொட்டி நேற்று முதல் இறுதிக்கிரியைகள் நடைபெறும் நாளையதினம் வரை மூன்று நாட்களுக்கு துக்கம் அனுஷ்டிக்கப்படும் என வடக்கு, கிழக்கு மாகாண அரசு அறிவித்திருக்கிறது.

திரு. அமிர்தலிங்கம், திரு. யோகேஸ்வரன் ஆகியோரின் பூதவுடல்கள் இன்று யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்படுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

கடந்த வியாழன் இரவு 7 மணியளவில் தங்களுடன் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருந்த மூன்று பேரினால் திரு. அமிர்தலிங்கமும், திரு. யோகேஸ்வரனும் சுட்டுக் கொல்லப்பட்டதாகக் கூறப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் மற்றொரு கூட்டணித் தலைவரான திரு. எம். சிவசிதம்பரம் காயமடைந்தார்.

இவர்களைச் சுட்டதாகக் கூறப்படும் மூவரும் பின்னர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# பாலகுமார் கண்டனம்

யாழ்ப்பாணம், ஜூலை 15

''தமிழர் விடுதலைக் கூட்டணியின் மூத்த தலைவரும், இன்றைய நாடாளுமன்ற உறுப்பினருமான திரு. அ. அமிர்தலிங்கத்தினதும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. வெ. யோகேஸ்வரனினதும் அகால மரணம் குறித்து ஆழ்ந்த வருத்தத்தை தெரிவித்துக்கொள்கிறோம். எவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ள இப்படுகொலைகள் குறித்து எமது கண்டனத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்''.

ஈழவர் ஜனநாயக முன்னணியின் பொதுச் செயலாளர் திரு. வே. பாலகுமாரன் விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:-

''நீண்டகால அரசியல் அனுபவமுடைய இத்தலைவர்கள் சில விடுதலை இயக்கங்களுடன் இணைந்து நின்று சடந்த பொதுத் தேர்தலைச் சந்தித்திருந்தபோது ஏற்பட்ட கசப்பான அனுபவங்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கில் கறுப்புக்கொடி

யாழ்ப்பாணம், ஜூலை 15

வடக்கில் நேற்று கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. கடைகள் பூட்டப்பட்டிருந்தன சினிமா அரங்குகளில் காட்சிகள் ரத்துச் செய்யப்பட்டன. வாகனங்களிலும் கறுப்புக் கொடிகள் காணப்பட்டன.

இ. போ. ச. பஸ் சேவைகளும் நண்பகலுடன் நிறுத்தப்பட்டதால் வீதிகளில் சன நடமாட்டம் இன்றி வீதிகள் வெறிசோடிக் காணப்பட்டன.

தூர இடங்களில் இருந்து பஸ்களில் யாழ்நகருக்கு வந்தவர்கள் பலர் நடந்தே வீடுகளுக்குச் சென்றனர். சிலர் அட்டோக்கள் மூலம் வீடு திரும்பினர்.

கிழக்கிலும் இதே நிலைமையே நேற்றுக் காணப்பட்டதாக எமது மட்டக்களப்புச் செய்தியாளர் தெரிவிக்கிறார். (இ-21)

# இன்பருட்டியில் பஸ்மீதுசூடு! மூன்று பேர் உயிரிழந்தனர்

வடமராட்சி, ஜூலை 15

இன்பருட்டி பிள்ளையார் கோவிலுக்கு சமீபமாகச் சென்ற மினிபஸ் மீது நேற்று முன்தினம் நண்பகல் 12.45 மணியளவில் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. இதில் மூவர் பலியானார்கள்; பலர் காயமடைந்தனர்.

இன்பருட்டியைச் சேர்ந்த கதிரமலை பாபுதாஸ் (24 வயது), சிவலோகநாதன் உதயராசா (23 வயது), சக்கோட்டையைச் சேர்ந்த எஸ். ரத்தினம் (45 வயது) ஆகியோரே உயிரிழந்தவர்களாவர்.

இச்சம்பவத்தில் காயம் அடைந்த கதிரமலை சண்முகதாஸ் (17 வயது), எஸ். செல்வக்குமார் (30 வயது) ஆகியோர் மந்திகை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை வியாழன் காலை 9 மணியளவில் பருத்தித்துறை முனைப் பகுதியில் இடம்பெற்ற சம்பவத்தில் எஸ். லூயின் (19 வயது), எஸ். ரகுராம் [20 வயது] ஆகியோர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-160)

# பி. பி .ஸி. செய்தியாளர் வெளியேற்றப்பட்டார்!

லண்டன், ஜூலை 15

பி. பி. சி. தொலைக்காட்சிச் சேவையின் பெண் செய்தியாளர் கேய்த் லேட்டியும் அவரது கமரா குழுவினரும் இலங்கைஅரசினால் வெளியேற்றப்பட்டனர்.

இதனை பி. பி. சி. உலக சேவை நேற்று மாலை அறிவித்தது.

கேய்த் லேட்டி டுபாயில் இருந்து இலங்கை நிலைமை பற்றி அனுப்பிய செய்தியை பி. பி. ஸி. தனது மாலை செய்திச் சுருளில் ஒலிபரப்பியது.

''இலங்கையின் தென்பகுதியில் சட்டம் ஒழுங்கு கிடையாது.

''பெரும்பாலான பகுதிகளில் அரசு நிர்வாகமே ஸ்தம்பித்து விட்டது.

''ஊரடங்குச் சட்டத்தை விதிப்பதுடன் அதனை அமுல் நடத்தக்கூடிய வல்லமையை ஜே. வி. பி. பெற்றுள்ளது. கொழும்பில் கூட ஊரடங்குச் சட்டத்தை ஜே. வி. பியினால் அமுல் நடத்த முடிகிறது என்றால், அதன் சக்தியை எப்படி வர்ணிப்பது?

சட்டத்தரணிகள், அரசியல்வாதிகள், மதகுருமார்களோ பத்திரிகைகளுக்கு பேட்டியளிக்க மறுக்கிறார்கள்.

அவசரகாலச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்படுபவர்கள் காணமற் போய்விடுகிறார்கள்.

''கடந்த 2 மாதங்களில் நூற்றுக்கணக்கானவர்கள் காணமற்போய் விட்டனர் என்று மனித உரிமைவாதிகள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சஞ்சீவி இன்று இல்லை!

திடீரென ஏற்பட்ட மின் விநியோகத் தடைகாரணமாக இன்று சஞ்சீவி வார இதழ் வெளிவரவில்லை. உதயன் நாளிதழும் வழமையான பக்கங்களுக் குக்குறைவாகவே வெளிவருகிறது வாசகர்கள் மன்னிப்பார்களாக! -நிர்வாகி

# சிவசிதம்பரம் தேறுகிறார் வாக்குமூலம் பெறப்பட்டது

கொழும்பு, ஜூலை 15

வியாழன் இரவு சூட்டுச்சம்பவத்தின் போது காயமடைந்த திரு. எம். சிவசிதம்பரம் ஆபத்தான கட்டத்தைத் தாண்டி விட்டதாக அறிவிக்கப்பட்டது.

ஆஸ்பத்திரியில் அவரது வார்டடைச் சுற்றி பலத்த காவல் போடப்பட்டிருக்கிறது.

காயமடைந்த திரு. மு. சிவசிதம்பரத்தின் வாக்குமூலத்தைப் பொலீஸார் பதிவுசெய்திருப்பதாகவும் தெரிய வருகிறது.

இந்தச் சம்பவம் நடைபெற்றபோது அந்த வீட்டில் இருந்ததாகக் கருதப்படும் திரு. மாவை சேனாதிராசாவின் வாக்குமூலமும் பொலீஸாரால் பதிவு செய்யப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டது.

இதேவேளை இந்தச் சூட்டுச் சம்பவம் நடைபெற்றபோது திருமதி. மங்கையர்க்கரசி அமிர்தலிங்கமும், திருமதி யோகேஸ்வரனும் வீட்டில் இருந்ததாக கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

(உ-எ-21)

# பல தலைவர்களும் அஞ்சலி

கொழும்பு, ஜூலை 15

கூட்டணித் தலைவர்கள் திரு. அ. அமிர்தலிங்கம். திரு. வெ. யோகேஸ்வரன் ஆகியோரின் மரணம் குறித்து பல தலைவர்களும் அனுதாபம் தெரிவித்திருக்கின்றனர்.

### கருணாநிதி அதிர்ச்சி

தலைவர்கள் கொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கேட்டு தாம் மிகுந்த அதிர்ச்சி அடைந்துள்ளதாக தமிழ்நாடு முதல் அமைச்சர் திரு. மு. கருணாநிதி தெரிவித்திருக்கிறார்.

இத்தகைய கொடூரமான, மனிதத்தன்மையற்ற செயலை ஜனநாயகப் போக்குடைய மக்கள் மன்னிக்கமுடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

### ஜனாதிபதியும் கவலை தெரிவிப்பு

இரு தலைவர்களின் மரணம் குறித்து ஜனாதிபதி பிரேமதாஸாவும் கவலை தெரிவித்தார்.

படுகாயமடைந்த திரு. சிவசிதம்பரம் விரைவில் குணமடையத் தான் பிரார்த்திப்பதாக ஜனாதிபதி அம்பாறைக் கூட்டத்தில் பேசுகையில் சொன்னார்.

தலைவர்களைக் கொல்வதன்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# இன்று பஸ் சேவை நடக்கும்

யாழ்ப்பாணம், ஜூலை 15

மறைந்த தமிழ் தலைவர்களின் இறுதி அஞ்சலி நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளவிருக்கும் மக்களின் நலனைக் கருத்தில்கொண்டு இன்று முதல் தனியார் மினி பஸ்களையும், போக்குவரத்துச் சபை பஸ்களையும் சேவையில் ஈடுபடுத்துவது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

நேற்று ஈ பி.ஆர்.எல்.எவ்., ஈ.என்.டி.எல்.எவ், ரெலோ ஆகிய இயக்கங்கள் ஒன்று கூடி இவ்வாறு தீர்மானித்ததாக செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டது.

[உ]

# தமிழர் நலன் பாதுகாப்பதில் மிகவும் உறுதியாக இருந்தவர்கள்

## அமிர்-யோகேஸ் மறைவு குறித்து ஈ.பி.ஆர்.எல்.எவ்

யாழ்ப்பாணம், ஜூலை 15

இன்றைய சூழ்நிலையில் தமிழர்களின் நலன்களைப் பாதுகாப்பதில் ஊசலாட்டமின்றி மிக உறுதியாக இருந்தவர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களான திருவாளர்கள் அ. அமிர்தலிங்கமும் வெ. யோகேஸ்வரனும்.

ஈழ மக்கள்புரட்சிகர விடுதலை முன்னணிநேற்றுவிடுத்த அறிக்கையில் இப்படித் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களான திருவா

(4 ஆ பக்கம் பார்க்க)

# மூன்று வாரங்களின் பின்பே மீண்டும் மின்விநியோகம்!

யாழ்ப்பாணம், ஜூலை 15

வடமாகாணத்திற்கான மின் விநியோகம் மீண்டும் கிடைப்பதற்கு இரண்டு அல்லதுமூன்றுவாரங்கள் ஆகலாம்.

இலங்கை மின்சார சபையின் உயர் அதிகாரி ஒருவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

ஹபரணைக்கும் உக்குவெலைக்கும் இடையில் 51ஆம், 52ஆம் இலக்கமுடைய இரண்டு மின் கோபுரங்களை தீவிரவாதிகள் கடந்த வியாழன் மாலை குண்டு வைத்துத் தகர்த்திருக்கின்றார்கள். இந்தக்கோபுரங்கள் மீண்டும் சீரமைக்கப்பட்ட பின்னரே வடமாகாணத்திற்குச் சீரான மின் விநியோகம் கிடைக்கும்.

அதுவரை வவுனியாவிலிருந்து வடக்கே உள்ள பகுதிகள் அனைத்துக்கும் மின் விநியோகம் கிடைக்காது என்று தெரிவிக்கப்பட்டது.

எனினும் சுன்னாகத்தில் உள்ள ஜெனரேட்டர்கள் மூலம் யாழ்நகருக்கும் ஏனைய

(4 ஆம் பக்கம் பார்க்க)

# ரஞ்சன் கூற்று கவனத்தில்!

புதுடில்லி, ஜூலை 15

மாத முடிவில் அமைதிப் படை விலக்கப்படாவிட்டால் பலவந்தமாக அதுவெளியேற்றப்படும் என்று இலங்கை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன தெரிவித்த கூற்றை இந்திய அரசு கவனத்துக்கு எடுத்துக் கொண்டிருக்கிறது.

புதுடில்லியில் இந்தியவெளியுறவு அமைச்சுப்பேச்சாளர் ஒருவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையில் கடும் பத்திரிகைத் தணிக்கை உண்டு. அமைச்சரின் கூற்றைகொழும்புப் பத்திரிகைகள் வெளியிட்டுள்ளன.

தணிக்கை அதிகாரிகளின் அனுமதி பெற்றே இது பிரசுரிக்கப்பட்டுள்ளது. ஆகவே அமைச்சரின் கூற்று சரியானதென்றே என எடுக்க வேண்டியுள்ளது.

வேறுசில கருத்துக்களையும் தான் சொல்லவில்லை என அமைச்சர் மறுத்திருக்கிறார்.

அவரின் மறுப்பு உத்தியோகபூர்வமாக வந்த பின்னரே இது குறித்து பதிலளிக்கப்படும்.

— இப்படி அந்த அதிகாரி சொன்னார் (உ-எ)

# கிளிநொச்சியில் தேடுதல்

கிளிநொச்சி, ஜூலை 15

கிளிநொச்சியில் உள்ள கணேசபுரம், ஜெயந்தி நகர். எட்டாம் வாய்க்கால் பகுதிகள் கடந்த வியாழக்கிழமை சுற்றி வளைக்கப்பட்டு பலத்த தேடுதல் மேற்கொள்ளப்பட்டது. (உ-76)

# ஹஜ்ஜுப் பெருநாள்

கொழும்பு, ஜூலை 15

இலங்கையிலும் உலக நாடுகளிலும் உள்ள முஸ்லிம் மக்கள் நேற்று ஹஜ்ஜுப் பெருநாளைக் கொண்டாடினார்கள்.

### சுபநேரம்

15—07—1989

ஆனி 31 — சனிக்கிழமை

நக்ஷத்திரம்: அனுஷம்

சுபநேரம்:

03.00 முதல் 04.30 வரை

ராகுகாலம்:

09.00 முதல் 10.30 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

# இந்தியக்குழு நாடு திரும்பியது; 2 தினங்களில் இலங்கைக்குப் பதில்

கொழும்பு, ஜூலை 15

பிரதமர் காந்தியின் சிறப்பு தூதர் பி ஜி. தேஷ்முக் நேற்று புதுடில்லி திரும்பினார்,

இலங்கை அதிகாரிகள் குழுவுடன் இரண்டாவது சுற்றுப் பேச்சுகளை நேற்று இந்தியக் குழு நடத்தியது.

அமைதிப்படை விலகல் சம்பந்தமாக இலங்கைதெரிவித்த யோசனைகளை எடுத்துக்கொண்டு இந்தியக் குழு புதுடில்லி திரும்பியது என்றும்—

இலங்கை யோசனைகளுக்கான புதுடில்லியின் பதில் இன்னும் இரண்டு தினங்களில் கிடைக்கலாம் என்றும் கொழும்பில் அதிகாரபூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன:

பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்ட இலங்கைக் குழுவுக்கு ஜனாதிபதியின் செயலாளர் கே. எச். ஜே. விஜேதாஸாவும் இந்தியக் குழுவுக்கு சிறப்புத் தூதர் பி. ஜி. தேஷ்முக்கும் தலைமை வகித்தனர்.

(உ-க-எ)

## முச்சந்தி முரளி




கறண்ட் [செய்தி ஷொக் அடிக்கிற செய்தியாகவல்லோ கிடக்குது........!

# ஜூலை 29ற்கு பின் வடக்கு கிழக்கின் பாதுகாப்பு இலங்கைப் படையிடம்

## அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 15

அமைதிப்படை விலக்கப்படாவிட்டாலும் ஜூலை 29க்குப் பின்னர் வடக்கு-கிழக்கு மாகாணத்தின் பாதுகாப்புப் பொறுப்பை இலங்கை இராணுவமும் பொலீஸாரும் ஏற்றுக்கொள்வர்.

வெளியுறவு அமைச்சரும் பாதுகாப்புத் துணை அமைச்சருமான திரு. ரஞ்சன் விஜேரத்ன நேற்று முன்தினம் செய்தியாளர் மாநாட்டில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

அமைதிப்படை விலகல் பற்றி பேச்சுக்கள் நடத்த வேண்டும் என்று ஹராரேயில் வைத்து இந்திய வெளியுறவு அமைச்சர் பி. வி. நரசிம்ம

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

சகல வீட்டுத் தளபாடங்களும், மின்சார உபகரணங்களும் உடனடியாக விற்பனைக்கு உண்டு. தொடர்பு: திருமதி செ. இராசநாயகம் No-01 கென்ஸ்மன் ஒழுங்கை, சாவகச்சேரி. (11538)

மானிப்பாய் பிரதான வீதியிலிருந்து (இணுவில் வீதியில்) 5 வது காணி (3 பரப்பு) விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: திருமதி வி. கனகசபை இணுவில் வீதி, மானிப்பாய். (11520)

கொடிகாமம் பருத்தித்துறை வீதியில் வீடு கட்டக்கூடிய மின்சார வசதியுடன் 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: S. E. தம்பையா, இல: 15, சென் பீற்றேஸ் லேன், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (11539)

பாவித்த அலுமாரிகள் உட்பட வீட்டுத் தளபாடங்களும் சகல மின்சார உபகரணங்கள், Bicycle, Ty. writer, T. V. மற்றும் பல விற்பனைக்கு உண்டு. தினமும் காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை பார்வையிடலாம். SUBEICA. 343, பருத்தித்துறை வீதி, அரசடி, நல்லூர். (11497)

### வீடு வளவு விற்பனைக்கு

உரும்பராய் சந்திக்கு அருகில் V.T. செல்லத்துரை வீதியில் சகல வசதிகளும் கொண்ட வீட்டுடன் 3பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட் இருபாலை சந்தி. (C/3041)

### கோழிக் குஞ்சு விநியோகம்

Hisex, Golden Comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள். Hyline வெள்ளை கறுப்பு, பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், Hybro புரொயிலர் குஞ்சுகள் முன்கூட்டியே பதிவு செய்து, ஒவ்வொரு வாரமும் பெற்றுக் கொள்ளலாம். சற்குணராஜா அன் பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (1052)

### கோழிக்குஞ்சு விநியோகம் (Uplands Farm)

(Dekalb) பிறவுண் பேடு. பிறவுண் சேவல் (Cobb) புரொயிலர் குஞ்சுகள் (19-7-89) புதன்கிழமை குறைந்த விலைக்கு விநியோகிக்கப்படும். (சேவல் குஞ்சு 50க்கு மேல் எடுப்பவர்களுக்கு விலை. ரூ. 3/50) உடன் பதிவு செய்க. இல: 9, கந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்திற்கு அண்மையில்.) (1091)

### இறைச்சிக் கோழி விற்பனைக்கு

Broiler இறைச்சிக்கோழிகள், பேட்டுக் கோழிகள், சேவற்கோழிகள், குப் குஞ்சுகள், விருத்துக் குஞ்சுகள் என்பன குறைந்த விலையில் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். சுகாதார முறைப்படி சுத்தம் செய்து கொடுக்கப்படும். Nallur Farm Centre, C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (C/3007)

### WANTED

Hindu Vellala Parents Seek a Educated Bride Willing to Setile in Canada. Age 26 (Holding Engineering Degree From Canadian University) Horoscope and Photo which will be sent back; 76, C/o Uthayan, Jaffna. (11525)

### தேவை

ஸ்ருடியோ வேலை பழகியவர்களும், பழக விரும்புபவர்களும் (ஆண்கள்) தேவை. தொடர்பு: ஸ்ருடியோ நித்ய சித்திரா, சங்கானை. (1090)

யாழ். நகரிலுள்ள பிரபல மின் பொருள் விற்பனை ஸ்தாபனத்திற்கு விற்பனையாளர், காசாளர் தேவை. கல்வித் தகமைகள் க.பொ.த. (சாதாரணம்) பரீட்சையில் கணிதம், ஆங்கிலமும் சித்தி அடைந்தவர்களாக இருத்தல் வேண்டும். வயதெல்லை 25-35 இடைப்பட்டவர்கள் 20-7-89க்கு முன் விண்ணப்பிக்கவும். தொடர்பு: 564 C/o Uthayan. (சி/3045)

### மணமகள் தேவை

யாழ்ப்பாண வேளாள கத்தோலிக்க வெளிநாட்டில் B.Sc. ஆசிரியர் லீவில் வந்துள்ள அவருக்கு 36-43 வயதிற்கிடைப்பட்ட பட்டதாரி அல்லது அதனோடு ஒத்த உள்நாட்டு வெளிநாட்டு மணமகள் தேவை. வெளிநாட்டு வேலை வாய்ப்பு மணமகனுக்கு தரப்படும். சமயம் தடையாக இருக்காது. மங்களா ஏஜென்சி கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். (1095)

### பெண் மருத்துவ உதவியாளர் தேவை

18 வயதிற்கும் 25 வயதிற்கு மிடைப்பட்ட பயிற்றப்பட்ட பயிற்சி பெற விரும்பும் பெண் மருத்துவ உதவியாளர்கள் தேவை. யாழ் மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத் தக்கது. 17 ஆம், 18ஆம் திகதி காலை 8 மணிக்கும் 12 மணிக்கும் இடையில் நேரில் வரவும். சிவகுமார் சகல நோய் சிகிச்சை நிலையம், இல: 16, முஸ்லிம் கல்லூரி வீதி, (லைடன் சந்திக்கும் சிவலைப் பள்ளிவாசலுக்கும் இடையில்) யாழ்ப்பாணம். (1094)

### WANTED

Wanted an Experienced Accounts, Clerk to maintain Accounts in English wiih a Sound Knowledge of Accounts and Book keeping, Retired persons too will be Considered. Apply to: The warden karuna Nilayam, Kilinochchi. (1092)

### தவறிவிட்டது

ஜெகசோதி ஆகிய நான் 13-7-89 காலை பருத்தித்துறை, யாழ்ப்பாண பஸ் வண்டியில் கோப்பாய்க்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் எனது வங்கிச் சேமிப்பு புத்தகங்கள் 3 வேறும் தஸ்தாவேஜுகள் அடங்கிய சிறுபையை தவறவிட்டு விட்டேன். கண்டு எடுத்தவர்கள் தயை கூர்ந்து உதயன் விளம்பரப்பணிமனையில் ஒப்படைக்குமாறு அன்பாக வேண்டுகின்றேன் (1093)

### வாடகைக்கு உண்டு

யாழ் மாநகரசபை எல்லைக்குள் போதனா வைத்தியசாலை, பெரியகடை றெயில்வே ஸ்ரேசன் போன்றவற்றிற்கு மிகவும் கிட்டிய தூரத்தில் வசதியுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. விரும்புவோர் உத்தியோகத்தராகவும், குடும்ப அங்கத்தவர்கள் ஐந்து பேருக்கு மேற்படாதவராகவும் முற்பணம் செலுத்தக் கூடியவராகவும் இருத்தல் நன்று. 563, C/o Uthayan. (1087)

### கல்வி

ஓய்வுபெற்ற அரசாங்க உத்தியோகத்தரினால் ஆங்கிலம் ஆரம்ப அறிவில் இருந்து பரந்த அறிவைப் பெறுவதற்கு உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும். நேரில் அல்லது கடிதமூலம் விண்ணப்பிக்கவும், I. E. T. 11B ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [விவேகானந்தா அச்சகத்திற்கு எதிர் மேல் மாடி] [1088]

### கல்வி

Personal Classes S.K. ஜீவமோகனின் (O/L) கணித வகுப்புக்கள் சனி, ஞாயிறு தினங்களில் காலை 10.00 மணிக்கு நடைபெறுகின்றன. தொடர்பு: I. E. T, 11 B, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (விவேகானந்தா அச்சகத்துக்கு எதிர்மாடி) (11423)

### வகுப்புக்கள்

ஆண்டு 6 தொடக்கம் O/L வரை கணிதம் 6 தொடக்கம் 8 வரை English G. C. E. (A/L) தூய கணிதம், பிரயோக கணிதம், 16 வருட அனுபவமுள்ளபட்டதாரி ஆசிரியர்களினால் கற்பிக்கப்படும். சிறு குழுக்களுக்கு வீடுகளில் வந்து கற்பிக்கவும் ஒழுங்கு செய்யப்படும். 562, C/o Uthayan, Jaffna. (1085)

### G. C. E. (O/L) New Syllabus

கணித பாடத்துக்கு தோற்றும் மாணவர்களுக்கு 10 மாதிரி வினாத்தாள்கள் (ஐந்து வினாத்தாள்கள் விடைகளுடன்) இலவச அனுபந்தமாக 300 பயிற்சி வினாக்களைக் கொண்டது. விடுமுறைக்கு பயிற்சி பெறவும் திறமைச் சித்திக்கு வழிகாட்டும் கைநூல் விலை ரூபா 37/50 உயர் கல்விப் பதிப்பக வெளியீடு புத்தகசாலையை அணுகுக. (11473)

### கெட்டிக்காரர்கள்

135, வானொலி நாடகங்கள், 20 மேடை நாடகங்கள் 40, சிறுகதைகள் ஆகியவற்றை எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் 9 வானொலி நாடகங்களின் தொகுப்பு கெட்டிக்காரர்கள் விலை ரூபா 25/- (11536)

### Typewriter

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும் சிறந்த முறையில் திருத்திக்கொள்ளவும், தமிழ், ஆங்கிலம் ரைப்பிங் செய்து கொள்ளவும். நாடுங்கள்: Fudo Enterprises 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (சி/3034)

### ரேனியோ

ரேனியோ தட்டச்சு மற்றும் சகல அச்சு வேலைகளும் குறித்த தவணையில் சிறந்த முறையில் செய்து கொள்ள: தயா அச்சகம், 138 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (மனோகரா சந்தி) (சி/2359)

### தீர்த்த உற்சவம்

வடமராட்சி, ஜூலை 15 புலோலி உபய கதிர்காம தான்தோன்றி முருகனாலய விசேஷ தீர்த்த உற்சவம் ஞாயிற்றுக்கிழமைகாலை 10-00 மணியளவில் தென் புலோலியூர் இளைஞர்களால் நடத்தப்படும். (இ-160)

சுன்னாகம் பல நோ. கூ. சங்க (வரைவுள்ளது) சுன்னாகம்:

### அறிவித்தல்

எமது சங்க 24 / 1172 இலக்க இசுசு லொறியிலிருந்து கழற்றப்பட்ட பின்வரும் பொருட்கள் 27-07-89-ந் திகதி வியாழனன்று முற்பகல் 10-00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

(1) 2?ஸ்ரீ மொடல் இசுசு எஞ்ஜின் - சங்க தலைமை அலுவலக முன்றலில் வைத்து விற்பனை செய்யப்படும்.

(2) உடற்கோப்பு -சங்க அரிசியாலை முன்றலில் வைத்து விற்கப்படும்.

பொதுமுகாமையாளர்
சுன்னாகம் ப. நோ. கூ. ச,
சுன்னாகம்.
14-07-89 (சி/3056)

## ஓராண்டு நினைவஞ்சலி



### செல்வன் செல்லையாயோகேஸ்வரன்
(கண்ணன்)

மலர்வு: 03. 07. 1971
உதிர்வு: 10. 07.1988

திதி: 15.07.1989

மண்ணுக்கு மகத்துவம் அளிக்க வந்தாயே கண்ணா!
உன்னைத் தண்ணீரில் அமரத்துவம் ஆக்கியது
விதி செய்த பழி தானோ?
எம் கண்ணீரே கடலானது
கண்ணா! நீ வாராயோ?
நிலைக்காது வாழ்க்கை என்பதனை உணர்த்த
நீ தானோ கிடைத்தாய் காலனுக்கு?
எம் நெஞ்சம் நிலைத்திருக்கின்ற வரை
களைக்க முடியாது கண்ணா! உன் நினைவுகளும்
கருத்தரித்துக் கொண்டேயிருக்கும்.

உன் பிரிவால் எந்நாளும் ஆறாத்துயரடையும்:
அப்பா, அம்மா,
அண்ணா, அக்காமார்,
உறவினர்கள், நண்பர்கள்.

அறிவாலயம்,
இமையாணன் - கிழக்கு,
உடுப்பிட்டி. (11540)

## 41 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### செல்வன் துரைரட்ணம் சிவநேசன்
(குட்டி)

தாயின் மடியில்: 03. 09. 1969
தாயக மடியில்: 05. 06. 1989

தமிழ் காக்க துணிந்தெழுந்த
தன்னிகரற்ற வீரனே!
அழிக்கவில்லை அவர் உன்னை
முடியாது அது கனவிலும் — ஏனெனில்
எங்களூர் வீதியின்
ஒவ்வொர் மூலையிலும்
காண்கின்றோம் உன் நிழலை
உன்னன்புத் தம்பிமார்
உன் பெயர் சொல்லாத நாளில்லை

15-07-1989 அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

அப்பா, அம்மா, அண்ணா, தங்கைகள்,
... பிறவாச் சகோதரர்
(நவக்கிரி)

நவக்கிரி,
புத்தூர். (1199)

## வல்வை கொத்தணிப் பாடசாலை இசை நடன நாடகப் போட்டி

வடமராட்சி, ஜூலை 15 வல்வை கொத்தணிப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற இசை, நடன, நாடகப் போட்டியில் வல்வை றோ. க. பாடசாலை இசைப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றது.

கனிஷ்ட பிரிவு நாடகப் போட்டியில் பொலிகண்டி இ. த. க. பாடசாலை முதலாம் இடத்தைப் பெற்றது.

சிரேஷ்ட கனிஷ்ட பிரிவு இசைப்போட்டியில் வல்வை மகளிர் கல்லூரி முதலாம் இடத்தைப் பெற்றது.

வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியில் நடைபெற்ற இப் போட்டிகளுக்கு கொத்தணிச் செயலாளர் திரு. க. இராசதுரை மத்யஸ்தம் வகித்தார். (ச-160)

### தான்தோன்றி ஈஸ்வரர் தேர்

ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரர் கோயில் ஆலய வேட்டைத் திருவிழா இன்று சனிக்கிழமை நடைபெறும்.

தேர்த் திருவிழா 17 ஆம் திகதி திங்கட்கிழமையும் தீர்த்தத் திருவிழா மறு நாள் செவ்வாய்க்கிழமையும் வழமை போல் நடைபெறவுள்ளன. (ச)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணுலகில்: 25- 05- 1938

விண்ணுலகில்: 26- 06- 1988

திதி: 15- 07- 1989



சிவபதம் எய்திய எங்கள் அன்புத் தெய்வம்

### திருமதி கணபதிப்பிள்ளை மனோன்மணி

அன்பினால் எம்மை ஆட்சி செய்தீர்
பண்பாலும், பாசத்தாலும் எம்மை
வளர்த்தெடுத்தீர்
தஞ்சமென நாம் வாழ்ந்த காலை
எம்மைத் தவிக்க விட்டு எங்கு சென்றீர்?
தாங்காது உங்கள் பிரிவு
ஆண்டு பல சென்றாலும்- அம்மா
ஆறாது எமது துயர்
நீங்காது உங்கள் நினைவு
தங்கள் ஆத்மா சாந்தி பெற பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் தவிக்கும்:
கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
உற்றார், உறவினர்.

இடந்தரை ஒழுங்கை,
காங்கேசன்துறை, (5115)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



### நாகரெத்தினம் ஆனந்தராஜா
(ஆனந்தி)

(வைத்தீஸ்வர வித்தியாலய மாணவன்)

மலர்வு:- 01-03-1971
உதிர்வு:- 01-06-1989

ஆனந்தி!
உனது படிக்கும்வயது சாகும் வயதாகியதே
பாலகண்டத்திலேயே உனக்கு இருண்டகாலம்
கண்ணை இழந்துவிட்டுக் கண்ணீர் விடுகின்றோம்
வாழவைப்பாய் என்றிருந்தோம்
அழவைத்து அகன்று விட்டாய்!
தேட்டம் என்றிருந்தோம்
தேடுங்கள் என்றுவிட்டாய்!
உன் இழப்புத்துயரம் எங்களுக்கு மட்டுமா?

இல்லை இல்லை உன்னோடு படித்தவர்கள் அதிபர், ஆசிரியர்கள், நண்பர்கள், முஸ்லிம் பெருமக்கள் அத்தனை பேரும் அனுதாபம் சொன்னார்கள். ஆனந்தி! உன் ஆத்மசாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இ. நாகரெத்தினம் குடும்பத்தினர்.
(M.M.A.C. சாரதி)

44. பாற் பண்ணை வீதி,
திருநெல்வேலி, (11537)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8 மாத சிசுவின் தலையை கடித்துத் துண்டாக்கிய நாய்!

ஹம்பர்க், ஜூலை 14

வீட்டு நாய் ஒன்று மூன்று மாதச் சிசு ஒன்றின் தலையை கடித்துத் துண்டாக்கியது.

இச்சம்பவம் மேற்கு ஜேர்மனி ஹம்பர்க்கில் இடம்பெற்றது.

வீட்டு அறை ஒன்றினுள் குழந்தையின் தலை காணப்பட்டது. அதைத் தொடர்ந்து நாய் சுட்டுக் கொல்லப்பட்டது.

குழந்தையின் பெற்றோர் மீது கவலையீனமாக நடந்து கொண்டனர் என்று குற்றஞ் சாட்டி வழக்குத் தொடருவது பற்றி ஆலோசனை நடத்துவதாகப் பொலீஸார் தெரிவித்தனர். (உ-எ)


க. பொ. த. உயர்தர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான வெளியீடு

**உயர்தர கணக்கியல் செய்முறைப் பயிற்சி**

கம்பனிப் பகுதியை உள்ளடக்கிய மாதிரிச் செய்கையுடனான நூல்

சி. யோகேஸ்வரன்

கிடைக்குமிடங்கள் ;

ஸ்ரீ லங்கா புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

சுதுமலை மேற்கு.
மானிப்பாய். [1201]



**விற்பனைக்கு**

சிறந்த நிலையில் உள்ள பர்மா தேக்கு அலுவலக மேசை, கட்டில்: கதிரைகள், Stand Lampshode, புத்தகம் வைக்கும் மலைவேம்பு ராக்கி (3 லாச்சியுடன்) வெளிநாட்டு விளையாட்டுக் கார், (கால்களினால் விளக்குவது) E.L.F 150, Starter Moter. Gear Box. Datson Engine 120y. லைபர் ஸ்ரூல், வேப்பம் பலகை விற்பனைக்கு

**ஆனந்தன் 'சாந்தினி இல்லம்'**
**ஆடியபாதம் றோட், (மார்க்கட்றோட்),**
**கொக்குவில் மேற்கு, கொக்குவில்.**
[1196]


# யாழ். பெரியாஸ்பத்திரி

# மருந்துப் பற்றுக்குறை நீங்கியது

யாழ்ப்பாணம், ஜூலை 15

யாழ். ஆஸ்பத்திரியில் ஏற்பட்டிருந்த மருந்துத் தட்டுப்பாடு ஓரளவு நீங்கியுள்ளது.

அநுராதபுரத்தில் இருந்து லொறி மூலம் மருந்து வகைகள் கொண்டு வரப்பட்டதை அடுத்தே தட்டுப்பாடு நீங்கியிருக்கிறது.

எனினும் அத்தியாவசிய தேவைகளுக்குரிய மருந்து வகைகள் மட்டுமே அநுராதபுரத்தில் இருந்து கொண்டு வரப்பட்டதாகவும்-

மேலும் மருந்து வகைகளை கொழும்பில் இருந்து எடுத்து வர ஆஸ்பத்திரி வட்டாரங்கள் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அறிய வந்துள்ளது. (உ-10)

## சமய வாழ்க்கை உதாசீனம் துயரங்கள் பெருகுவதற்கு காரணம்

### அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பேச்சு

''ஒவ்வொரு மனிதனும் தத்தமது சமய வழி நின்று ஒழுகி வாழ்வின் இலட்சியத்தை அடைந்து பேரின்பப் பேற்றைப் பெற வேண்டும். இன்று மக்கள் சமய வாழ்க்கை முறைகளை உதாசீனம் செய்து வாழ்வதனாலேயே துயரங்கள் பெருகுகின்றன''.

இலங்கைச் சைவமன்ற உப-தலைவர் திரு. எஸ். செல்லத்துரை புலோலி கிழக்கு சைவ மன்றத்தை அங்குரார்ப்பணம் செய்துவைத்து உரையாற்றுகையில் இப்படிக் கூறினார்.

பருத்தித்துறை பர்வதவர்தனி கலா மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்துக்கான சகல ஒழுங்குகளையும் இலங்கைச் சைவமன்றம் மேற்கொண்டிருந்தது.

திரு. செல்லத்துரை தமது உரையில் மேலும்கூறியதாவது

சமய வாழ்க்கை முறைகளையும் சமய தத்துவங்களையும் மக்கள் மத்தியில் பரப்பி மக்களை நல்வழிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளைச் சமய நிறுவனங்கள் மேற்கொள்ள வேண்டும்.

சமய வாழ்க்கை முறைகள் மனிதனை பிறப்பின் இலட்சியத்தை அடைய வழிவகுக்கின்றன: சமயங்கள் எல்லாம் இறைவனை அடையும் வழிகளையே நமக்குப் போதிக்கின்றன.

மக்களின் சைவசமய அறிவை வளர்ப்பதற்காக சைவ நூல்களை வெளியீடு செய்யவேண்டும். சைவசமயப் பெரியார்கள் போன்றோரை ஊக்குவித்து சைவ சமய நூல்களை வெளியிடச் செய்ய உதவ வேண்டும்.

சைவ சமய நூலகளைப்பாதுகாக்க வேண்டும். சைவநூல் நிலையங்கள் அமைக்கப்பட்டு மக்களுக்கு உதவவேண்டும். இது போன்ற நடவடிக்கைகள் சைவ சமய நிறுவனங்களின் தலையாய கடமைகளாகும்'' இவ்வாறு அவர் கூறினார். (ச-118)

## யாழ் கல்வித் திணைக்கள கூறுவிலைகள்

யாழ்ப்பாணம் ஜூலை 15

யாழ் பிரதேச கல்வித் திணைக்களத்தின் கூறு விலைகள் 24-ஆம் திகதி காலை 10 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும் என யாழ் பிரதிக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (க)

## மோட்டார் சைக்கிள் வழி மறிப்பு

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரை ஆயுதந்தாங்கிய இருவர் வழி மறித்து அவர்களிடம் இருந்த மோதிரத்தையும், பணத்தையும் அபகரித்துச் சென்றனர்.

இச்சம்பவம் கடந்த புதன் கிழமை நல்லூர் சங்கிலியன் வீதியில் இடம்பெற்றது. (இ-111)


★ அதி உயர்ந்த தரத்திற்கும் ★
உத்தரவாதத்திற்கும்
வாங்குங்கள்



**சிக்மா பம்ப்ஸ்**
**CEYGMA PUMPS**



மின் மோட்டர்கள் (ELECTRIC MOTOR PUMPS)
நீர் இறைக்கும் இயந்திரங்கள் (ENGINE DRIVEN PUMPS)

ஒரு வருட உத்தரவாதத்துடன்
விற்பனையாகிக் கொண்டிருக்கிறது.

உங்கள் சகல நீர் இறைக்கும் தேவைகளையும்
பூர்த்தி செய்யத் தொடர்பு கொள்ளுங்க...

**UNITED AGRO ENGINEERING**

274/1, ஆஸ்பத்திரி வீதி,
(பெரியாஸ்பத்திரி முன்பாக)
யாழ்ப்பாணம்.

தொழிற்சாலை:
நாவற்குழி, கைதடி.
(C/3052)



உ
சிவமயம்

★ திருமண வைபவம் ★

அன்புடையீர்!

நிகழும் சுக்கில வருடம் ஆனி மாதம் 31ஆம் நாள் (15-07-1989) சனிக்கிழமை

எமது புத்திரன் திருநிறை செல்வன் **தயாளன்** அவர்களுக்கும்

எமது புத்திரி திருநிறை செல்வி **சபாஷினி** அவர்களுக்கும்

லண்டன் கிங்ஸ் பறி உயர் நிலைக் கல்லூரியில் (Kingsbury High School) திருமணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருக்கிறார்கள்.
அத்தருணம் தாங்கள் மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்

இங்ஙனம்

திரு. திருமதி நா. சிவபாதன் யாழ்ப்பாணம். திரு. திருமதி ஏ. எஸ். குணசிங்கம் லண்டன்.
[11545]


வட இலங்கை

# தனியார் வைத்தியக் கல்லூரி தேசியமயமாக வேண்டும்

### மண்டபத் திறப்பு விழாவில் உரை

யாழ்ப்பாணம், ஜூலை 15

''வட கொழும்பு தனியார் வைத்தியக் கல்லூரியை அரசாங்கம் தேசியமயமாக்கி உள்ளது. ஆனால் வட இலங்கை தனியார் வைத்தியக் கல்லூரியைப் பொறுத்து மாற்றாந்தாய் மனப்பாங்கை காட்டி வருகிறது. அரசாங்கம் எமது கல்லூரியையும் தேசிய மயமாக்க வேண்டும். இந்த விஷயத்தில் எம்மால் இயன்ற உதவியை வழங்கத் தயாராக இருக்கின்றோம்.

வட இலங்கை தனியார் வைத்தியக் கல்லூரியின் இயக்குநர் சபைத் தலைவர் டாக்டர் கெங்காதரன் மேற்கண்டவாறு கூறினார்.

கல்லூரியின் உடற்கூற்றியல மண்டபத்தின் திறப்பு விழாவில் உரை ஆற்றிய போது அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் ''இருபது லட்சம் மக்கள் தொகையுடைய எமது பிரதேசத்தில் குறைந்த பட்சம் 5 ஆயிரம் டாக்டர்கள் தேவை. இப்போழுது யாழ் பல்கலைக் கழகத்தில இருந்து வருடாந்தம் 100க்கு குறைவான டாக்டர்களையே உருவாக்க முடிகின்றது.

ஆசியாவிலேயே மிகப் பழைய மூளாய் கூட்டுறவு ஆஸ்பத்திரியில் அமைந்திருக்கும் எமது கல்லூரி வருடாந்தம் 70 முதல் 80 டாக்டர்களை உருவாக்க முடியும். இதனால் எம்மத்தியில் நிலவும் டாக்டர் பற்றுக்குறையைத் தணிக்க முடியும் என்று கூறினார்.

டாக்டர் கெங்காதரன் திறப்பு விழாவிற்கான கொடியை ஏற்றி வைக்க அவருடன் சேர்ந்து டாக்டர்கள் பிலிப்ஸ், கருணாகரன், சபாரத்தினம் ஆகியோர் மங்கள விளக்கேற்றி திறப்பு விழாவை ஆரம்பித்து வைத்தனர்.

செயலாளர் அறிக்கையை சமர்ப்பித்து உரையாற்றிய டாக்டர் பிலிப்ஸ் தமது வைத்தியசாலை ஒரு சட்டரீதியான நிறுவனம் என்றும் எம். பி. பி. எஸ். பட்டம் வரை இங்கு படிக்கலாம் எனவும் கூறினார்.

வைத்தியசாலை இயக்குநர் சபையின் கௌரவ பணிப்பாளர் டாக்டர் கருணாகரன் உரை ஆற்றுகையில், மருத்துவம் படிக்க போதிய தகைமை பெற்றும் மருத்துவக் கல்லூரியில் நுழைய முடியாத எமது மாணவர்களின் விரக்தியைத் தணிக்க எமது கல்லூரி போன்ற தனியார் நிறுவனங்கள் துணை புரிகின்றன எனக் கூறினார்.

வைத்தியசாலை இயக்குநர் சபையின் பதில் செயலாளர் டாக்டர் எஸ். சிவானந்தராசா இத்திறப்பு விழாவில் கலந்து கொண்ட டாக்டர்களுக்கும் பெற்றோருக்-ம் வைத்தியசாலை போதனாசிரியர்களுக்கும் அலுவலகர்களுக்கும் இவ் விழாவை நடத்த துணைபுரிந்த ரிக்கட் அன்ட் கோல்மன் கம்பனிக்கும் நன்றி தெரிவித்தார். (க)

## புனித உத்தரியமாதா உற்சவம்

குருநகர், ஜூலை 15

குருநகர், புனித உத்தரிய மாதா ஆலய வருடாந்த உற்சவம் 10ஆம் திகதி கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமானது.

தினமும் மாலை 6 மணிக்கு செபமாலை, அருளுரை, திருப்பலி பூசை நடைபெறும்.

15ஆம் திகதி சனிக்கிழமை செபமாலை, திருப்பலி, நற்கருணை ஆராதனை, சற்பிரசாத சுற்றுப்பிரகாரம் என்பன இடம்பெறும்.

16ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 7 மணிக்கு திருநாள் பாடல் கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

மாலை 5-30 மணிக்கு செபமாலையுடன் திருச்சுருப பவனியும் நடைபெறும். [ச-51]

## சுடப்பட்டார்

யாழ்ப்பாணம், ஜூலை 15

புதன்கிழமை பண்டத்தரிப்பு பகுதியில் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். (இ-9)

## அடிக்கல் நடுகை

கொடிகாமம், ஜூலை 15

வரணி கொத்தணி மகா வித்தியாலயத்தில் எட்டு லட்சம் ரூபா செலவில் ஒன்று கூடல் மண்டபத்துக்கான அடிக்கல்லை கல்வி திணைக்கள கட்டட வேலைப் பரிசோதகர் திரு. எஸ். விவேகானந்தன் நட்டு வைத்தார்.

வித்தியாலய அதிபர் திரு. சி. துரைராசாவின் முயற்சியால் இவ் ஒன்று கூடல் மண்டபத்துக்கான பணம் ஒதுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ச-75)

## நீர்வேலி பிள்ளையார் உற்சவங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 15

நீர்வேலி வாய்க்காற்தரவை பிள்ளையார் கோயில் கொடியேற்ற வைபவம் 7ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமானது.

வேட்டைத் திருவிழா 15 ஆம் திகதி சனிக்கிழமையும் சப்பறத்திருவிழா 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் தேர்த் திருவிழா 17 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கும் தீர்த்தத் திருவிழா 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கும் நடைபெறவுள்ளன. (ச)


**அறிவித்தல்**

சுகாதார சேவைகள்
பிராந்தியப் பணிப்பாளர் அலுவலகம்
யாழ்ப்பாணம்.

**பாவித்த வாகனங்களின்**

**ஏலவிற்பனை**

இத்திணைக்களத்தினால் பாவிக்கப்பட்டு பழுதடைந்த கீழ்காணும் வாகனங்கள் எதிர்வரும் 27-07-89 (வியாழக்கிழமை) காலை 10.00 மணியளவில், 304/3 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில உள்ள எமது மருந்துக்களஞ்சிய வளவினுள் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

(1) 33 ஸ்ரீ 5576 வோக்ஸ்வேகன் வான்
(2) 33 ஸ்ரீ 8288 ''

இவ்வாகனங்களைப் பார்வையிட விரும்புவோர் மேலே குறிப்பிட்ட விலாசத்தில் அலுவலக நாட்களில் பார்வையிடலாம் என்பதை அறியத்தருகின்றேன்.

அதி உயர் கேள்விக்காரர் தனது கேள்வித் தொகையை உடனடியாக இவ்வலுவலகத்தில் செலுத்தி குறித்த வாகனத்தை அன்றைய தினமே அப்புறப் படுத்துதல் வேண்டும்.

இது சம்பந்தமான மேலதிக விபரங்களை 59, விக்ரோறியா றோட், யாழ்ப்பாணத்திலுள்ள எனது அலுவலகத்தில், வேலை நாட்களில் அறிந்துகொள்ளலாம்.

ந. கனகசபை,
சு. சே. பி. பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்
[சி-2907]



# ஆங்கிலம் பேச வேண்டுமா?

கூச்சமின்றி சரளமாக ஆங்கிலத்தில் பேச வேண்டுமா? பிறரைப்போல் நீங்களும் ஆங்கிலம் சரளமாகக் கூச்சமின்றிப் பேச ஆசைப்படுகிறீர்களா? கவலையை விடுங்கள். புதுமையான முறையில் தபால்மூலம் தமிழில் ஆங்கிலம்படியுங்கள் எளிய அஞ்சல் வழிப்பயிற்சி: தமிழ் தெரிந்த யாவரும் சேரலாம்.

**Bright Training Centre இல் படித்த மாணவர்களின் கருத்து**

★ I thank you very much for your nice training. I can speak and write English now: I never forget your training centre and I like to introduce your training centre to my friends and relations.
Miss. Radsaniyanayaki Krishnapillai,
Naranthanai central, Kayts.

★ I can speak and write English very well now. I feel very happy when I talk with my friends because your spoken English is enough for me.
Miss. Sozamathevy Krishanarajah,
Kings Avenue, Urumparai East,
Urumparai.

★ I am very glad to write my thoughts in this letter. I am proud of you and your centre BTC has cultivated my English knowledge within three months. It is your success, NO DOUBT, I have already told about your centre to my friends. I can help your centre whenever I can.
Master Thavanayagam Gnanavinthan,
'Shukthantham' Karaithivu - 1.

★ I would like to inform you that after I got BTC English training I have learnt a lot of vocabulary and improved my English knowledge.
Miss. S. Fovziya Anas,
No. 14, N. H. Mawatha,
China Fort, Beruwela.

★ Before I joined your BTC as a student I had hesitation and fear to speak English. Now by the help of your BTC I have fair knowledge to read, write and speak in English.
Mr. K. Gnanalingham,
Main Street, Thambiluvil - 2, (E. P.)

வெளிநாடுகளிலிருந்து படிக்க விரும்பும் மாணவர்களுக்கு பல விசேட வசதிகள் செய்துள்ளோம்.
எமது கல்வித்திட்டம் பற்றி மேலதிக விபரங்கள் அறிய முத்திரையொட்டிய தபாலுறையுடன் தொடர்பு கொள்க:

**BRIGHT TRAINING CENTRE,**
P. O. Box 162, COLOMBO.
(C/2991)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

"நீம் சுகாதார தூபம்"
வேப்பம் விதையில் இருந்து தயாரிக்கப் பட்ட 'நீம் சுகாதார தூபம்' உங்கள் வீட்டில் உள்ள நுளம்பு, இலையான், கொசு, பூச்சி ஆகியனவற்றை அகற்றி வீட்டில் நறுமணம் கமழச் செய்கிறது.
சிறிய பைக்கற் ரூபா ஒன்று மட்டுமே!
இன்றே வாங்கி உபயோகியுங்கள்.
ஓர் 'மில்க்வைற்' தயாரிப்பு

# உதயன்

15 07 1989 சனிக்கிழமை

MILKWHITE BAR SOAP
"சிக்கனமே சிறந்த செல்வம்"
சிக்கன சலவைக்கு நுரைவளம் கூடிய "மில்க்வைற் பார் சோப்பை" வாங்கி உபயோகியுங்கள்.
சிறிய பார்சோப் ரூபா 10/- மட்டுமே!
-மில்க்வைற், யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சண்பகவல்லி தம்பித்துரை

திருமதி சண்பகவல்லி தம்பித்துரை 13-07-1989 காலை சிவபதமடைந்துவிட்டார்.

இவர் தொல்புரத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர் (Bornio). திரு. இளையதம்பி ராமசாமி, திருமதி ராமசாமி தம்பதிகளின் அன்பு மகளும், இளைப்பாறிய புகையிரத இலாகா உத்தியோகத்தர் திரு. அ. தம்பித்துரையின் அன்பு மனைவியும், தேவதாசன் பிரதம கணக்காளர் (Zambia) காசிநாதன் (தொழிற்சாலை அதிபர், Kotiyagalla S.P. பொகவந்தலாவ), சிறீகாந்தன், தேவஞானி (Denmark) ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. சண்முகசுந்தரம், திருலோகசுந்தரம், விஜயசுந்தரம் வரதலட்சுமி, ஆனந்தவல்லி, பூரணவல்லி, சற்குணவல்லி, வள்ளிநாயகி ஆகியோரின் அன்புச்சகோதரியும் ஜீவதாரணி (Zambia), சிவசோதி, ரவிச்சந்திரராஜன் (Denmark) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஹரேஸ், ரமேஷ், தர்சன், மேரி வேளாங்கண்ணி, தர்சனி ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 15-07-1989 சனிக்கிழமை இன்றுகாலை 10-00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொழும்புத்துறை துண்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்:
த. சிறீகாந்தன் (மகன்)

16, சச்சேரி-நல்லூர் வீதி,
கண்டிக்குளி. (1205)

### திரு. முருகேசு நடராசா

(பிரபல புகையிலை வியாபாரி)

கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த முருகேசு நடராசா (பிரபல புகையிலை வியாபாரி) காலமானார். இவர் சரஸ்வதியின் அன்புக் கணவரும், ஞானேஸ்வரி, இராசேஸ்வரி (ஜேர்மனி), நகுலேஸ்வரி, நந்தகுமார் (மாணவர் கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், பரமேஸ்வரன் (யாழ். மாநகரசபை), சிவகுருநாதன் (ஜேர்மனி), வாமதேவன் (ஆசிரியர் - நக்குவாறு) ஆகியோரின் அன்பு மாமனாரும், சுதர்சினி, கவிதா (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), இமாகினி, ஜீவகன், சுதர்சன், தங்கிதா, கீர்த்தனு ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவர்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று (15-07-89) அவரது இல்லத்தில் நடைபெற்றுபூதவுடல் காலை 10 00 மணி அளவில் தகனக்கிரியைக்காக கொக்குவில் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
செ. பரமேஸ்வரன்

பொற்பதி றேட்,
கொக்குவில். (1208)

### திரு. விஸ்வலிங்கம் குலசிங்கம்

கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த ஓய்வு பெற்ற கட்டிடத் திணைக்கள பிரதிப்பணிப்பாளரும், பின் அதே திணைக்கள பொறியியல் ஆலோசகராகக் கடமையாற்றிபவருமான V. குலசிங்கம் 8-7-89 இல் கொழும்பில் காலமானார்.

அன்னார் கொட்டாஞ்சேனை கணபதி வித்தியாலய ஆசிரியை ஜெயலெட்சுமியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற திருமதி நடேசன், திருமதி நடராசா, தாமோதரம்பிள்ளை, ஆகியோரின் அன்புச் சகோதரரும், கந்தப்பிள்ளை, திருமதி இரத்தினசிங்கம், தி மதி பிறைசூடி (வேம்படி மகளிர் கல்லூரி), ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

இறுதிக் கிரியைகள் 9-7-89 ஞாயிற்றுக்கிழமை கணத்தை மயானத்தில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்: நண்பர்கள்: ஏற்றுக்கொள்ளவும்,

தகவல்:
சி. கந்தப்பிள்ளை

77, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். (1204)

### திரு. வில்லியம் ஜெயராஜ்

திரு: வில்லியம் ஜெயராஜ் 17-7-89இல் அகால மரணமானார். இவர் சவிரிபிள்ளை மரியாம்பிள்ளை (உடையார) - மரியாம்பிள்ளை மரியம்மா ஆகியோரின் அன்பு மகனும், பற்றிமா ஜெயமலரின் அன்புக் கணவரும், எட்வின் யோசப் (கல்வித் திணைக்களம், நல்லூர்), டெனிசியஸ் (தபால் அதிபர், சங்கானை), ஆள்கிறேஸ் குரூேட்டில்லா, ஜெயசிந்தா புஸ்பம் (லண்டன்), ரெறன்சியா (லண்டன்), அருட்திருரூபன் மரியாம்பிள்ளை (கரம்பன் பங்குத்தந்தை), வினில் விறட் ஆகியோரின் சகோதரரும், பொன்னுத்துரை, திரேசா ஆகியோரின் மருமகனும், ஞானேந்திரன், அருள்சீலன் (கணக்காளர், வேலணை ப: நோ. கூ. ச). ஸ்ரனிஸ் சிலாஸ், யோகரட்ணம் (பிரான்ஸ்), ஜெயரட்ணம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று 15-7-89 சனிக்கிழமை காலை 9 மணிக்கு அல்லைப்பிட்டி புனித மரியாள் ஆலயத்தில் நடைபெறும். திருப்பலியின் பின் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

(1209)

### ஒத்திவைப்பு

இன்று நல்லை ஆதினத்தில் நடைபெறவிருந்த திருமதி வாசஸ்பதி ரஜீந்திரனின் இசை அரங்கேற்றம் ஒத்திவைக்கப் பட்டுள்ளது: எதிர்வரும் 20 ஆம் திகதி இந்த அரங்கேற்றம் நடைபெறும் (உ)

### மூன்று வாரங்களி....

இடங்களுக்கும் சுழற்சி முறையில் — தினமும் அரை மணி நேரம் — மின்சாரம் வழங்க இலங்கை மின்சார சபை முயற்சி எடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஹபரணைக்கு அருகே தகர்க்கப்பட்டிருக்கும் மின் கோபுரங்களைத் திருத்துவதற்கு கொழும்பில் இருந்து தொழில் நுட்பவியலாளர்கள் வரவேண்டியிருக்கும் என்றும் —

அதன் பின்னரே சீரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

### ஜூலை 29---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
ராவிடம் தெரிவித்தேன் என்று இந்தியா கூறுவதை நான் மறுக்கிறேன்.

முன்னாள் இந்தியத் தூதர் டிக்ஸிற் அமைதிப்படை விலகல் பற்றிச் சொன்னதையே நரசிம்மராவிடம் நான் சொன்னேன்.

ஜூன் முடிவில் அரைவாசித் துருப்புக்களும் டிசம்பர் முடிவில் எஞ்சிய துருப்புக்களும் விலக்கிக் கொள்ளப்படும் என்று திரு: டிக்ஸிற் கூறியிருந்தார்.

இது விஷயமாகப் பேச இலங்கை வருவதாக நரசிம்மராவ்தான் சொன்னார். அந்த நேரத்தில்தான் ஜனாதிபதியின் அமைதிப்படை விலகல் கோரிக்கை வந்தது:

— இப்படி அமைச்சர் விஜேரத்ன சொன்னார்.

### பல தலைவர்களும்---

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)
மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது என்றும் ஜனாதிபதி பிரேமதாஸா சொன்னார்.

#### நட்வர்சிங்

திரு. அமிர்தலிங்கம் சுட்டுக் கொல்லப்பட்டது தமக்கு ஆழ்ந்த அதிர்ச்சியைத் தந்துள்ளதாக இந்திய வெளியுறவு இணை அமைச்சர் கே: நட்வர் சிங் நேற்றுத் தெரிவித்தார்.

இச்செயலைத் தான் வன்மையாகக் கண்டிப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

#### மூப்பனார் கருத்து

திரு: அமிர்தலிங்கத்தின் மறைவால் இலங்கைத் தமிழர்களின் எதிர்காலத்தில் ஒரு துன்பம் ஏற்பட்டு விட்டது. அமைதிப்படை இலங்கையில் தொடர்ந்து இருக்கவேண்டும் என்பதை இது வலியுறுத்துகிறது — என்று தமிழக இந்திரா காங்கிரஸின் பிரமுகர் திரு: கருப்பையா மூப்பனார் குறிப்பிட்டார்:

#### ம. பொ. சியின் செய்தி

தமிழரசுக் கழகத் தலைவர் ம, பொ. சிவஞானம் தமது செய்தியில் —

"இப்படுகொலைகள் மனித நாகரிகத்துக்கு இழிவு தரக் கூடியவை.

இலங்கை விவகாரத்தில் இந்திய அரசு உறுதியாகவும், அவசியமானால் கொஞ்சம் கடுமையாகவும் நடந்துகொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது" — என்று தரிவித்தார்.

#### செல்வி ஜெயலலிதா

அ. தி. மு: க. பொதுச்செயலாளர் செல்வி ஜெயலலிதா விடுத்த செய்தியில் —

"இச்சம்பவம் தமிழர் பகுதியில் அமைதியையும் உறுதிப்பாட்டையும் ஏற்படுத்த அமைதிப்படை இருக்கவேண்டியதை சந்தேகமற நிரூபித்திருக்கிறது" என்று தெரிவித்துள்ளார்.

#### குமரி அனந்தன்

இந்திரா காங்கிரஸ் தமிழகப் பிரிவு துணைத் தலைவர் குமரி அனந்தன் இரு தலைவர்களின் மறைவுகுறித்து விடுத்த செய்தியில் —

"இலங்கைத் தமிழரையும் இந்தியரையும் ஒன்றுபட்டு நின்று காப்போமென உறுதி கொள்ளவேண்டும்" — என்று தெரிவித்துள்ளார்.

#### சிவாஜி

தமிழக முன்னேற்ற முன்னணித் தலைவர் சிவாஜிகணேசன் "துப்பாக்கி மூலம் அரசியல் தீர்வு காணமுடியாது" —என்றார்.

### பாலகுமார்....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
களின் பின்பு, தனித்து நின்று விடுதலை இயக்கங்களிடையிலான ஐக்கியத்துக்காக அயராது உழைத்துவந்தனர்.

இவ்வகையான ஐக்கியம் ஒன்றிக்கான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருக்கையில் சுட்டுக் கொல்லப்பட்டது. நியாயமற்ற செயலாகும்.

-இப்படி அவர் தெரிவித்துள்ளார். [இ-3]

### பி. பி. ஸி....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
கூறுகின்றனர்.

றுகுணு பல்கலைக் கழகத்தில் பத்திரிகைக்குப்பேட்டியளித்த மாணவர்கள் மறுநாள் கைது செயப்பட்டனர்.

"எம்மை நாட்டைவிட்டுப் போகவேண்டும் என்றும் இல்லாவிடில் வெளியேற்றப்படுவீர் என்றும் அரசு எமக்கு உத்தரவிட்டது."

—இப்படிடெலிவிஷன் செய்தியாளர் தெரிவித்தார் என்று பி. பி. ஸி: அறிவித்தது. (உ-எ)

### தமிழர் நலன்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
ளர்கள் அ. அமிர்தலிங்கம், வெ. யோகேஸ்வரன் ஆகியோர் கொலைசெய்யப்பட்டும், திரு மு. சிவசிதம்பரம் துப்பாக்கிச் சூட்டுக்கிலக்காகி ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டும் உள்ள செய்தி எமக்கு பேரதிர்ச்சியைக் கொடுக்கின்றது.

வடக்கு, கிழக்கிலிருந்து தமிழ் பேசும் மக்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் வழங்கப்படாதநிலையில், இங்கிருந்து இந்திய அமைதிப்படை வெளியேறுவதை மிக வன்மையாகக் கண்டித்தவர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியினரும் அதன் தலைவர்களும் ஆவர்.

இலங்கை அரசுடன் செய்து கொள்ளப்பட்ட இரகசிய உடன்படிக்கையின் அடிப்படையிலேயே, இத்தகைய சம்பவங்கள் நிகழ்கின்றன என்பதைஇன்று நாம்நேரடியாகக் காண முடிகின்றது.

இத்தகைய கொலை நிகழக் கூடிய சூழ்நிலை உள்ளதென்பதை ஏற்கனவே நாம் பல தடவை சுட்டிக்காட்டியிருந்தோம்.

மறைந்த இரண்டு தலைவர்களுக்கும் எமது அஞ்சலியைத் தெரிவிப்பதோடு, இத்தகைய கோழைத்தனமான கொலைகளின் மூலம் தமிழ் பேசும் மக்களின் விடுதலைப் போராட்டத்தை ஒரு போதும் தடுத்து நிறுத்தமுடியாதென்பதை திட்டவட்டமாகக் கூறிவைப்பதோடு, தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய மண்ணிலிருந்து, இன்று நவீன எட்டப்பன்களாக மாறியுள்ள இத் துரோகக் கும்பலை துடைத்தெறியும் வரை ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி விடாப்பிடியாகத் தொடர்ந்து போராடும் என்பதை இச் சந்தர்ப்பத்தில் உறுதியாகக் கூறிவைக்க விரும்புகின்றோம்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அமிர் யோகேஸின்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
திரு. அமிர்தலிங்கத்தின் மெய்பாதுகாவலர்களினால் சுடப்பட்டனர். இருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர். மற்றவர் நேற்று காலமானார்.

இந்தச் சம்பவத்தின் போது திரு. அமிர்தலிங்கத்தின் தலையில் மூன்று குண்டுகளும், மார்பில் மூன்று குண்டுகளும்பாய்ந்தன. அவர் கொழு பு பெரியாஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்ட போது அங்கு அவர் இறந்து விட்டதாக அறிவிக்கப்பட்டது.

திரு. யோகேஸ்வரனின் வயிற்றிலும் மார்பிலும் பதினொரு குண்டுகள் பாய்ந்திருந்தன. அவர் சூட்டுக்கு இலக்கானதும் அந்த இடத்திலேயே மரணமானார்.

இவர்களின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில வடக்கு-கிழக்கு மாகாணத்தில் 3 நாள் துக்கம் அனுஷ்டிக்கப்படும் என்று வடக்கு-கிழக்கு மாகாண அரசு அறிவித்திருக்கிறது.

அரச அலுவலகங்களில் தேசியக்கொடி அரைக் கம்பத்தில் பறக்கவிடப்படும் என்றும்— அறிவிக்கப்பட்டது.

வாகனங்களில் கறுப்புக் கொடி பறக்கவிடுமாறும் கறுப்புச் சின்னம் அணியுமாறும் வடக்கு, கிழக்கு மாகாண முதல்வர் வேண்டுகோள்விடுத்திருக்கிறார்.

பொதுமக்கள் இறுதி அஞ்சலி செலுத்தும் முகமாக தலைவர்களின் பூதவுடல்களைஇன்று சிலமணி நேரமாவது மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார் ஆகிய இடங்களில் வைப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது:

பின்னர் இன்று நண்பகல் அளவில் இருவரினதும் பூதவுடல்கள் யாழ்ப்பாணத்துக்கு விமானம் மூலம் எடுத்துவரப்படும்:

யாழ்ப்பாணத்தில் தந்தை செல்வா நினைவாலயத்துக்கு அருகில் தலைவர்களின் பூதவுடல்கள் பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருக்கும்.

பின்னர் நாளை மாலையில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் பூதவுடல்கள் சகல மரியாதைகளுடனும் தகனம் செய்யப்படும்.

இத்தகவல்களை யாழ். மாவட்ட அரசியல் இணைப்பாளர் திரு. முருகநேசன் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர்கள் சந்திப்பின் போது தெரிவித்தார்.

நீண்டகாலமாக ஈழத் தமிழர்களினால் மதிக்கப்பட்ட பழம்பெரும் தலைவர்கள் என்ற முறையில், திரு. அமிர்தலிங்கம், திரு. யோகேஸ்வரன் ஆகியோரின் இறுதிக்கிரியைகளை மாகாண அரசு முன்னின்று நடத்துவதாக அவர் சொன்னார்:

## மரண அறிவித்தல்

### பிரம்மஸ்ரீ இ.குமாரசாமிக்குருக்கள்

மட்டுவில் தெற்கு வேரக்கேணி முன்னை நாள் அர்ச்சகர் பிரம்மஸ்ரீ இ. குமாரசாமிக்குருக்கள் அவர்கள் சென்ற 11-07-1989 செவ்வாய்க்கிழமை முருகன் திருவடி சேர்ந்தார். அன்னாரின் ஈமக்கிரியைகள் அன்று மாலை நடைபெற்றது என்பதை அறியத்தருகின்றோம்.

தகவல்:
மக்கள், மருமக்கள்.

(11545)

## மரண அறிவித்தல்கள்

### திரு. சி. பொன்னுத்துரை

(முன்னாள் அதிபர் உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலை)

திரு: சி. பொன்னுத்துரை (முன்னாள் அதிபர் சைவத்தமிழ் வித்தியாசாலை) 14-07-89 ல் சிவபதம் அடைந்தார்: அன்னார் காலஞ்சென்ற கொக்குவில் இராசம்மா, உரும்பராய் அன்னலட்சுமி ஆகியோரின் கணவரும் சிவநேயன், சிவேந்திரன், Dr. சிவபாலன் (அச்சுவேலி), சிவராணி, சிவதாசன்(லண்டன்), அரியரத்தினம் (T: C. உரும்பராய்), சிவானந்தன், சிவசுப்பிரமணியன் (லண்டன்), சிவகுமாரி, காலஞ்சென்ற சிவகுமாரன், சிவயோகன் (லண்டன்) ஆகியோரின் தந்தையும் ஜெயபாலன் (மாவட்ட அதிகாரி கூட்டுறவுத் திணைக்களம் யாழ்ப்பாணம்) கந்தையா, லீலாவதி, நேசரத்தினம், கமலாவதி, மங்கையற்கரசி, பராசக்தி, விக்னேஸ்வரி, தேவிகா, சற்குணராணி, ஈஸ்வரி ஆகியோரின் மாமனுமாவார். அன்னாரின் ஈமக்கிரிகைகள் (15-07-89) இன்று இரண்டு மணியளவில் 'சங்கமம்' நீர்வேலி தெற்கில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
பொ. சிவநேயன்

(11548)

### திரு. யோகலிங்கம்

(இலங்கைப் போக்குவரத்துச் சபை யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நுணாவிலைச் சேர்ந்த யோகலிங்கம் (இலங்கைப் போக்குவரத்துச் சபை யாழ்ப்பாணம்) காலமானார் இவர் இராசமணியின் அன்புக் கணவரும் சகிலாவின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற அப்புத்துரை, செல்லம்மா ஆகியோரின் அன்பு மகனும் கனகசிங்கம், (வெற்றி), கனகம்மா, லோகேஸ்வரி, சரஸ்வதி, சுந்தரலிங்கம் (ஊழியர் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும். வைத்தீஸ்வரன், இராஜேஸ்வரி, இராஜரத்தினம்[சவுதி அரேபியா], கதிர்காமநாதன் [விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியர் புத்தளம் சாகிராக்கல்லூரி] ஆகியோரின் அன்பு மைத்துனரும், சுஜன், அகிலா, சுகந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை, சின்னத்தங்கம் ஆகியோரின் அன்பு மருமகனுமாவார் அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று மாலை 4:00 மணிக்கு நுணாவில் மயானத்தில் நடைபெறும் இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அ. சுந்தரலிங்கம்

நுணாவில் சந்தி,
சாவகச்சேரி. [11544]

### திருமதி தர்மலிங்கம் சுந்தரம்

கோப்பாய் தெற்கு, இருபாலையைச் சேர்ந்த திருமதி தர்மலிங்கம் சுந்தரம் 14-07-89 இல் காலமானார்.

இவர் காலம் சென்ற திரு: தர்மலிங்கத்தின்(C.T.B) அன்பு மனைவியும், காலம் சென்ற செல்லையா நாகமுத்துவின் அன்பு மகளும், நல்லையாவின் சகோதரியும், கமலவேணி, கனகரஞ்சிதம், சிவ இன்பதேவி [France], தர்மராணி [U.K], காலம் சென்ற திருப்பதி நாதன், கேதிஸ்வரநாதன் (Captain, HongKong), மாலினி [France], சாந்தவதனி (Germany), காலம் சென்ற சம்பத்குமார், பாரத்குமார் [France] ஆகியோரின் அன்புத் தாயாரும், V. கணேசன் [T.O, நீர்ப்பாசத் திணைக்களம், கந்தளாய்], A. செல்லையா [ஓய்வு பெற்ற இலங்கை இராணுவ பொலிஸ்], R. பத்மநாதன் [France], P: ரகுநாதன் [U.K]. K. கலாதேவி [Canada], Roke Gunarajah [France], K. பஞ்சலிங்கம் [Germany] ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரபாளினி, தாரணி, செல்வராஜன் [Canada], செல்வரஜனி, றபினி, நிரஞ்சன் [Canada], வித்தியா (U.K), யுவேந்திரன் [U K] ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 15-07-89 இன்று சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு டச்சு றோட், இருபாலையில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இருபாலை செக்கடி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஆ. செல்லையா.

டச்சு றோட்,
இருபாலை. [11547]

### திரு. ம. வெங்கடாசல சர்மா

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி பிரம்மஸ்ரீ ம. வெங்கடாசலசர்மா, கொல்லங்கிராய் வீரகத்தி விநாயகர் ஆலயக்குருக்கள் 13-7-89 இல் காலமானார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 14-7-89 வெள்ளிக்கிழமை நடைபெற்றது என்பதை அறியத் தருகின்றோம்.

தகவல்:
வெ. சுப்பிரமணிய சர்மாவும் சகோதரர்களும்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி. (1206)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 392/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 15-07-1989இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org